# தேசியம்

THESIYAM ජාතිය

www.thesiyamnews.com

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

குரல் - 49 | 08.05.2023 (திங்கட்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் - இரா.சம்பந்தன்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கள் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திடீரென இரா.சம்பந்தனை நேரில் சென்று சந்தித்துள்ளார். இதன் போது இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம்,

பக்கம் 5

## வடக்கு - கிழக்கில் தனியார் காணிகளை ஒவ்வொரு பகுதியாக அரசாங்கம் அபகரித்து வருகின்றது: விகாரைகள் அமைக்க காணிகளை விற்காதீர்கள்!!

### தர்மலிங்கம் சித்தார்த்தன் கோரிக்கை..!



சிறிதளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக உங்கள் காணிகளை மாற்று சமூகத்தினருக்கு விற்க வேண்டாமென, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்

பக்கம் 5

# தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை ஒருபோதும் அகற்றமுடியாது! சவேந்திர சில்வா



யாழ். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை இராணுவத்தினரின் வழிபாட்டுக்காகவே உருவாக்கப்பட்டது. அதனை ஒருபோதும் அகற்றமுடியாது என பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இந்த விகாரைக்கான கலசம் வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றிருந்தது.

இதனையடுத்து தனியார் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்படி விகாரையை அகற்றி அந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்களால் 3 நாள் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் சவேந்திர சில்வாவிடம் ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியதற்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்துள்ளார்.

பக்கம் 5

# சமஷ்டி அடிப்படையில் பேச்சு தயார் என ஜனாதிபதி அறிவிக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. நிபந்தனை



பக்கம் 5

அதிகாரப்பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தையை சமஷ்டி அடிப்படையில் முன்னெடுப்பதற்கு தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்க வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

குறித்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் அவருடன் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கு தயராக உள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

வடக்கு தமிழ் எம்.பிக்களுடன் அதிகாரப்பகிர்வு, அபிவிருத்தி உள்ளிட்ட வடக்கு மக்கள் சார்ந்த பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் 11ஆம் திகதி

## ஜனாதிபதி ரணில் தமிழரசுக் கட்சி சந்திப்பில் திடீர் திருப்பம்!

எதிர்வரும் 9ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க உள்ள நிகழ்வு தற்போது பெரும் பரபரப்பை ஏட்படுத்தியுள்ளது.

தமிழரசு கட்சியுடனான ஜனாதிபதியின் இந்த தனிப்பட்ட சந்திப்பு ஊடாக கிழக்கை ஓரம்கட்டும் முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுப்பதாக அரசியல் தரப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

பக்கம் 5




பக்கம் 5

கந்தரோடை விகாரைக்கு எதிராக போராட்டம்

## பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்து.!!

## எங்களுடைய சொந்த நிலத்தில் உழைத்து முன்னேறுவது தான் இந்த மண்ணிலே நிலைத்து வாழக்கூடியவர்களாக எம்மை மாற்றியமைக்கும் : நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்!



பக்கம் 6

எங்களுடைய சொந்த நிலத்தில் சொந்த காலிலே நாங்கள் உழைத்து முன்னேறுவதுதான் இந்த மண்ணிலே நிலைத்து வாழக்கூடியவர்களாக எம்மை மாற்றியமைக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உழவனூர் பகுதியில் சிறுகைத் தொழிலகமும் மாதிரிப் பண்ணையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றது. லண்டன் கற்பக விநாயகர் ஆலயத்தின் நிதியில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட குறித்த மாதிரி பண்ணையும், சிறுகைத்தொழிற்சாலையுமானது

**தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!**

தேசியம் www.thesiyamnews.com THESIYAM දේසියම්

ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# சந்திக்க அழைக்கின்றார்... சிந்தித்து செயற்படுங்கள்!

லண்டனில் இருந்து திரும்பியவுடன், நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளார் என செய்திகள் வெளியாகி உள் ளன.

இந்த சந்திப்பில் இந்த 3 கட்சிகளையும் கூட்டாகவா அல் லது தனித்தனியாகவா ஜனாதிபதி சந்திக்கப் போகி ன்றார் என்பது தெளிவாக இல்லை.

இந்தக் கட்சிகளை அவர் கூட்டாக சந்திக்கப் போகின் றார் என்றால், எந்த அடிப்படையில் இந்த கூட்டான சந்தி ப்புக்கு அழைப்பு விடுகக்கப்பட்டிருக்கின்றது என்பது, இயல்வா கவே எழுகின்ற கேள்வி!

இந்த 3 கட்சிகளும் கடந்த தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சியின் சின் னத்தில் போட்டியிட்டு, ஒரே பாராளுமன்றக் குழுவாக இயங்கி வந்திருக்கின்ற கட்சிகள்.

அந்த பாராளுமன்றக் குழுவின் தலைவராக சம்பந்தரே செயற்பட்டு வந்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தம்மை கூறி வந்தி ருந்தாலும், பாராளுமன்றத்தில் தேர்தல் சட்டத்தின் பிரகாரம், தமிழரசுக் கட்சி பாராளுமன்றக் குழுவா கவே, 10 எம்.பிக்களை கொண்ட அதன் குழு அங்கீ கரிக்கப்பட்டு, அவ்வாறே கருதப்பட்டும் வந்திருக்கின் றது.

ஆனால், இந்த வருடம் தை மாதத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்காக வேட்பாளர் நியமனப் பத்திரம்கள் தாக் கல் செய்யப்பட இருந்த சந்தர்ப்பத்தில், இந்த மூன்று கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டி யிடப் போவதாக அறிவித்தது.

அதற்குப் பதிலடியாக கூட்டமைப்பின் ஏனைய இரண்டு கட்சிகளும் ஓர் அதிரடி அறிவிப்பை கூட்டாக வெளி யிட்டன.

தமிழரசுக் கட்சி தனிவழி சென்று விட்டதால், இப் பொழுது தாங்கள் தான் கூட்டமைப்பின் எஞ்சியுள்ள கட் சிகள் என்று அவை அறிவித்ததோடு, தமிழ்த் தேசியக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 3 கட்சிகளை கூட்டமைப்பில் இணைத்துக் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெய ரில், உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்து வதாக பிரகடனப்படுத்தின.

ஒரு சில ஆண்டுகளுக்குப் முன்னர், அதாவது, புளொட் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்ட 2011 க்கு முன்னர், வேறு இரண்டு கட்சிகளுடன் அது கூட்டாக இணைந்து, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட் டணி என்ற பெயரில் தேர்தல் திணைக்களத்தில் பதி வும் செய்யப்பட்டிருந்தது.

இப்பொழுது புது அவதாரம் எடுத்த தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு, உள்ளூராட்சித் தேர்தலில் அந்தக் கட்டணி யின் பெயரிலேயே நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தது.

ஆயினும், இப்பொழுது உள்ளூராட்சி தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஏற்படுத்திய சூடும் எங்கோ போய்த் தொலைந்து விட்டது!

ரெலோ எம்.பிகள் மூவரும், புளொட் எம் பி ஒருவரும் இந்தப் பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சியுனான கூட்டமைப்பு உறவை இன்னமும் துண்டிக்கவில்லை. ஆகவே, நடைமுறையில் தொடர்ந்து ஒரே அணி யாகவே தமிழரசு,ரெலோ,புளொட் ஆகிய மூன்று கட்சி களும் அங்கு இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் தான், இந்த மூன்று கட்சிகளையும் ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்திருக்கின்றார்.

சந்திப்பு கூட்டாகவா அல்லது தனித்தனியாகவா என்பது இனிமேல் தான் தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதை செய்ய வேண்டியது ஜனாதிபதி செயலகம்.

தமிழரசுக் கட்சி எம்.பி ஆகிய சுமந்திரன் இந்த சந்தி ப்பை கூட்டமைப்புடனான சந்திப்பு என்று ஊடகங் களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

அதுதான் உண்மை நிலமை என்றால், என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், இந்த பேச்சு வார்த்தையை ஒரு பொது நிலைப்பாட்டோடு அணுகு வது இந்தத் தமிழ்க் கட்சிகளின் கடமை.

தினமும் ஒரு புதிய பிரச்சனை என, சிங்கள பௌத்த ஆதிக்கம் தமிழ் மாநிலத்தில், அதிகார வெறியுடன், நிர் வாணத் தாண்டவம் ஆடும் இன்றைய காலக்கட்ட த்தில், ஜனாதிபதி உடனான இந்தச் சந்திப்பை, பொறுப்போடு இந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் அணுக வேண்டும்.

ஒரே குரலில், கூட்டாக இந்த சந்திப்பில் அவை பேச வேண்டும்.

இப்படி பேசுவதற்கு ஏதுவாக, இப்பொழுது இருக்கும் மிக குறுகிய கால இடைவெளியில், இந்தக் கட்சிகள் உடன டியாக சந்தித்து ஆலோசனை நடாத்த வேண்டும்.

சந்திப்பு தனித்தனியாக என்றால் தமிழரசுக் கட்சிக்கு பிரச்சனை இல்லை. அது தனிவழி கண்ட கட்சி!

ஆனால், ஓரணியில் நிற்கும் ரெலோ வும் புளொட்டும் இந்த சந்திப்பில் கூட்டாகவே கலந்து கொள்ள வேண் டும்.

ஜனாதிபதி ரணில் எந்தவொரு ராஜபக்சவையும் போன்றவர் அல்ல. உலகறிந்த இந்த உண்மை, தமிழ் மக்களுக்கும் தெரிந்தது தான்.

அவருடன் ஒன்றாக உட்காந்து இந்த மூன்று கட்சி களும் பேசும் போது, எச்சரிக்கை உணர்வோடு அவை நடந்து கொள்ள வேண்டும். அது சம்பந்தன், சுமந்தி ரன் ஆகியோருக்கு, மடடும் அல்ல, மற்றவர்களுக்கும் சேர்த்துத் தான்.

ஜனாதிபதி தெரிவிற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பு க்கு சில தினங்கள் கழித்து, தமிழ் எம் பிக்கள் தொடர் பில், அதுவும், கூட்டமைப்பு எம்பிக்கள் தொடர்பில், ஜனாதிபதி என்ன கூறியிருந்தார் என்பதை தமிழ் மக் கள் மறக்கவில்லை.

**எங்கள் தமிழ்த் தேசிய**
**எம் பிக்களும் மறக்க கூடாது.**

ஆசிரியர்

# ஜெர்மனி மட்டுமல்லாது ஐரோப்பாவில் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த அகம் புறம் கண்காட்சி தொடங்கி வைத்த அமைச்சர் தங்கம் தென்னரசு வாழ்த்துத் தெரிவித்த தமிழக முதல்வர் ஸ்டாலின்!!





ஜெர்மனி லிண்டன் அருங்காட்சியகத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி அகம் புறம் கண் காட்சி தொடங்கப்பட்டது. தமிழ் மரபு அரக்கட் டளை இந்தக் கண்காட்சி ஏற்பாட்டில் ஜெர்மனி பாடன் ஊர்ட்டெம்பெர்க் மாநிலத்தின் ஆசிய வியல், கிழக்காசிய சேகரிப்புகளுக்குப் புகழ்பெற்ற லிண்டன் அருங்காட்சியகத்தோடு இணைந்து செயல்பட்டோம்.

இந்த நிகழ்ச்சியின் தொடக்கவிழாவைச் சிறப் பிக்க தமிழ்நாட்டின் தொழில்துறை, தொல்லியல், தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் நேரில் வந்திருந் தார். அப்போது ஸ்டுட்கார்ட் நகரில் தமிழ் மக்கள் சந்திப்பும் நிகழ்ந்தது.

தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியும் அனுப்பியிருந்தார்.

ஜெர்மனி மட்டுமல்லாது ஐரோப்பாவில் தமிழர் களுக்குப் பெருமை சேர்த்த அகம் புறம் கண் காட்சி இன்றோடு நிறைவடைகின்றது.

இந்த ஆறு மாதக் காலகட்டத்தில் தமிழர் வர லாறு, தொல்லியல், அச்சுப்பதிப்பு, கலைகள், சிற் பக்கலை, வாழ்வியல் என பல்வேறு துறைகளில் ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சிகள் நடந்தேறின.

அதில் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைவது சென்னை அருங்காட்சியகத்திற்கும் ஜெர்மனி லிண்டன் அருங்காட்சியகத்துக்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட நிக ழ்வு. இது இரு அருங்காட்சியகங்களுக்கிடையே இணைந்த வகையிலான செயல்பாடுகளுக்கு அடித்தளம் அமைத்தது என்பதும் அதில் தமிழ் மரபு அறக்கட்டளையின் பங்கு முக்கியமானது என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம்.

தமிழ் மரபு அறக்கட்டளை ஐரோப்பாவில் ஒரு மாபெரும் தமிழர் வரலாற்று நிகழ்விற்குப் பங்க ளித்திருக்கின்றோம் என்பதில் பெருமகிழ்வு கொள்கின்றோம். இந்த முயற்சியில் துணை நின்ற அனைவருக்கும் தமிழ் மரபு அறக் கட்டளை பன்னாட்டு அமைப்பின் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

**முனைவர்.க.சுபாஷிணி**
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு



# வெடுக்குநாறி மலையிலிருந்து தையிட்டிக்கு...

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். போலீசாரோடு முரண்பட்ட தன்மூலம் அதை உணர்ச்சிகரமான ஒரு விவகாரமாக மாற்றியதும் அந்தக் கட்சிதான். அதன் விளைவாகத் தமிழரசுக் கட்சியும் உட்பட ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பகுதிக்கு வரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நீதிமன்றம் தலையிடும் ஒரு நிலைமை உருவாகியது.

எனினும் போராட்டம் பெருமளவுக்கு கட்சிப் பிரமுகர்களின் போராட்டமாகவே இருந்தது. கொஞ்சம் தொண்டர்களும் காணப்பட்டார்கள். முன்னணி போலீசாரோடு முரண்பட்டதுங்கூட அதன் பாணியில் வளமையானது என்று சொல்லலாம். அரச படைகளோடு முரண்படுவதை ஒரு சாகசமாக முன்னணி செய்து வருகின்றது. இதுபோன்ற போராட்டங்களில் அவ்வாறான சாகசச் செயலுக்கும் ஒரு பொருள் உண்டு. அது போலீசாரை நிதானமிழக்கச் செய்யும். அதன் தக்கபூர்வ விளைவாக சிங்கள பௌத்த மயமாக்கல் மேலும் அம்பலப்படும் என்பது உண்மை. ஆனால் அறவழிப் போராட்டங்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டங்களும் சாகசங்களால் வெற்றி பெறுவதில்லை.

இதுவிடயத்தில் சில அடிப்படையான கேள்விகள் உண்டு. அந்த விகாரை திடீரென்று வானத்திலிருந்து தரைக்கு வரவில்லை. அது கடந்த நான்கு வருடங்களாக கட்டப்பட்டு வருகிறது. அதற்கு அத்திவாரம் வைத்தபோதே அது விவகாரம் ஆக்கப்பட்டது. அதைக் கட்டியெழுப்பும் வரையிலும் ஏன் தமிழ்க் கட்சிகள் பார்த்துக் கொண்டிருந்தன? இப்பொழுதும் விகாரை முழுமையாக திறக்கப்படவில்லை. அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதுதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கியது. நாவற்குழியிலும் அப்படித்தான்.

இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அத்திவாரம் வெட்டப்படும் பொழுதும் அதைத் தடுக்க முடியவில்லை. அது கட்டி முடிக்கப்படுவதையும் தடுக்க முடியவில்லை. அது ஒரு மதம் சார்ந்த பொதுக் கட்டிடம் என்ற அடிப்படையில் அதை இனி அகற்றுவது மேலும் விவகாரமாகி விடும். எனவே இங்கு தொகுத்துப் பார்த்தால் தெரியவருவது எனவென்றால், தமிழ்க் கட்சிகளின் இயலாமை தான். தமிழ்க் கட்சிகளின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியல் தான்.

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டபொழுது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு போனார். முரண்பட்டார். அதுபோலவே தையிட்டி விகாரை விவகாரத்திலும் தொடக்கத்திலேயே அது பிரதேசசபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் 5 ஆண்டுகள் தூங்கிக் கிடந்துவிட்டு திடீரென்று விழித்த அரசியலை எப்படிப் பார்ப்பது ?

ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ரணில் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அவர் சொன்னதைச் செய்கிறார். அது அரசுடைய தரப்பு. திணைக்களங்கள் அவர்களுடைய உபகரணங்கள். படைத்தரப்பு அதன் காவல்காரன். எனவே எல்லா வளங்களையும் கொட்டி அவர்கள் சொன்னதைச் செய்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு சொன்னதைச் செய்யும் சக்தி உடையவர்களா? அதற்குத் தேவையான நீண்ட கால நோக்கிலான வழி வரைபடம் அவர்களிடம் உண்டா? இல்லையென்றபடியால்தான் அவர்கள் நிகழ்வுகளை மையமாக வைத்து எதிர்ப்பு அரசியல் செய்கின்றார்களா? அவர்கள் எதிர்த்த போதிலும் விகாரைகள், தாதுகோபங்கள் கட்டப்பட்டு கொண்டேயிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளிடம் தெளிவான வழிவரைபடம் இல்லை என்பதைத்தான் தையிட்டி விவகாரம் நமக்கு உணர்த்துகின்றது. சிங்களபௌத்த மயமாக்கல் என்பது, தமிழ்மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைக்கும் நோக்கிலானது. எனவே தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டால்தான் அதைத் தடுக்கலாம். செல்வராஜா கஜேந்திரன் தையிட்டியில் வைத்து அதைச் சொன்னார். ஆனால் சொன்னால் மட்டும் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு யார் தடை ?

எனைய கட்சிகளைத் துரோகிகள், ஒட்டுக் குழுக்கள், கைக்கூலிகள் என்றெல்லாம் கூறிக் கொண்டு எப்படி ஒற்றுமைப்படுவது? இனி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியாது. ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரதான நீரோட்ட கட்சியாக வளர்ச்சி பெற வேண்டும். அல்லது ஏனைய கட்சிகள் தாங்கள் ஒரு பெரிய கூட்டாக வளர்ச்சி பெற வேண்டும்.

எந்தக் கூட்டாக இருந்தாலும் அது தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக் கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத்தான் தேச நிர்மானத்திற்கான அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.

தேசத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்தித்து அதற்குரிய வழி வரைபடத்தைத் தயாரித்து இருந்திருந்தால், சிங்கள பௌத்த மயமாக்கலை எதிர்கொள்வதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கியிருந்திருப்பார்கள். கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான், நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்ய வேண்டிவந்தது. அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்க வேண்டி வந்தது. இது ஒரு சட்ட விவகாரம் அல்ல. இது ஒரு அரசியல் விவகாரம். இதை அணுகுவதற்கு அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஒரு கட்சியிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை என்பதைத்தான் தையிட்டியில் குந்தி கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நமக்கு உணர்த்தினார்கள். சில தொண்டர்களைத் தவிர மக்களை அங்கே கொண்டுவர முடியவில்லை.

எனவே இங்கு தேவையானது என்னவென்றால், தேசத்தை நிர்மாணிப்பதற்குரிய கட்டமைப்புகள் எவை எவை என்று கண்டு அவற்றை கட்டியெழுப்புவது தான். இது பல ஆண்டுகளாக நான் எழுதிவரும் ஒரு விடயந்தான். ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகள் எவையெவை? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்களைப் பலப்படுத்துவதற்குரிய கட்டமைப்புக்களே அவை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் எவை? நிலம்மொழி இனம் அல்லது சனம் பொதுப் பண்பாடு பொதுப் பொருளாதாரம் போன்றவைதான். எனவே மேற்கண்ட அம்சங்களை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் தேவையான சுயகவசங்கள் என்று வர்ணிக்கத்தக்க கட்டமைப்புகளை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கலாம். தேசத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று கூறும் ஒரு கட்சி அதற்கு தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை ஏன் இதுவரை உருவாக்கவில்லை? அதற்கு பதில் வேண்டும்.



தையிட்டியில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக நிற்கவில்லை. கட்சிப் பிரமுகர்கள்தான் நின்றார்கள். அது ஒரு நிகழ்வு. அதுபோல பல நிகழ்வுகளை நாங்கள் கடந்த 14 ஆண்டுகளில் கண்டு விட்டோம். நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியலின் தோல்வியே இது. இப்பொழுது தேவையாக இருப்பது மூலோபாய ரீதியில் சிந்தித்து கட்டமைப்புகளை உருவாக்கி நீண்ட கால அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதுதான். அவ்வப்போது நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றும் அரசியல் எனப்படுவது தேசத்தை நிர்மாணிப்பதற்கு உரியதல்ல. தேசத்தை நிர்மாணிப்பது என்பது எதிர்ப்பு அரசியல் மட்டுமல்ல. அது கட்டியெழுப்பும் அரசியலுந்தான்(Constructive). எதைக் கட்டியெழுப்புவது? எதிர்க்கத் தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவது.

இன்றைக்கு தையிட்டி. நாளைக்கு வேறொரு இடத்தில் வேறு ஒரு பௌத்த மதக் கட்டுமானத்துக்கு அத்திவாரம் வைக்கப்படும். அப்பொழுதும் அந்த நிகழ்வுக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் போராடக்கூடும். வழக்குத் தொடுக்கக்கூடும். போலீசோடு தள்ளுமுள்ளுப்படக்கூடும். வழக்கில் வெல்லவும் கூடும். ஆனால் அவை யாவுமே நிகழ்வுகள்தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர் செயற்பாடுகளாக இருக்கப்போவதில்லை. சிங்களபௌத்த மயமாக்கலைத் தடுக்கப்போவதில்லை.

இப்பொழுது வெடுக்குநாறி மலையில் இருந்து கவனக்குவிப்பு தையிட்டிக்குத் திரும்பி விட்டது. அதுகூட சிங்கள பௌத்த மயமாக்கலுக்குச் சாதகமான ஒரு விடியம்தான். தமிழ்மக்களின் கவனத்தை, தமிழ்க் கட்சிகளின் கவனத்தை அவ்வப்போது வெவ்வேறு நிகழ்வுகளின் மீது திசை திருப்புவது. தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தைச் சிதற விடுவது.

அண்மை வாரங்களாக தமிழ்ச் சமூகத்துக்குள் காணப்படும் சாதி ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் சாதி ஒடுக்கு முறைகளைக் குறித்தும் விமர்சனங்கள் வெளிவருகின்றன. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையுந்தான். சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை, விடுதலையே அல்ல. இந்த விளக்கத்தோடு

> **எந்தக் கூட்டாக இருந்தாலும் அது தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக் கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத்தான் தேச நிர்மானத்திற்கான அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.**

உள்ளூரில் காணப்படும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு. மத முரண்பாடு, சாதி முரண்பாடு நாவற்குழி, தையிட்டி வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை போன்ற அனைத்து அம்சங்களும் தமிழ்மக்களின் கவனத்தை அவ்வபபோது சிதறடிக்கின்றன. இவற்றிற்கு எதிராக தனித்தனியாக போராட்டத் தேவையில்லை. இவை அனைத்தும் தேச நிர்மானத்துக்கு ஏற்பட்ட சவால்களே. எனவே தேசத்தை ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது கட்டியெழுப்பும் போது இந்த விடயங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டு விடும்.

இது மே மாதம். 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஒரு கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட மாதம். "யுத்தத்தை வெற்றி கொண்டவர்கள் நாங்கள்" என்று தையிட்டியில் வைத்து ஒரு போலீஸ் அதிகாரி கூறுகிறார். அதன் பொருள் இதுதான். நீங்கள் தேசமாக இருப்பதை நாங்கள் தோற்கடித்து விட்டோம் என்று பொருள். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்மக்கள் ஒரு தேசமாக மேலெழுவதைத் தோற்கடித்ததில் அரசாங்கத்தை விடவும் தமிழ்க் கட்சிகளுக்கே பங்கு அதிகம். இதை மறுவளமாகச் சொன்னால் தமிழ் மக்களை ஓரளவுக்காவது தேசமாகத் திரட்டியது அரசாங்கந்தான். ஒடுக்குமுறைதான் தமிழ்க் கட்சிகளை ஒர் உணர்ச்சிப்புள்ளியில் சந்திக்க வைக்கின்றது. தையிட்டியில் அது நடந்தது. மு.திருநாவுக்கரசு சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவதுபோல எதிரிதான் தமிழ்த் தேசியத்தின் பிரதான பலமா?

தியாகியாய், துரோகியாய், கைக்கூலியாய், ஒட்டுக்குழுவாய், வடக்காய், கிழக்காய், வன்னியாய், யாழ்ப்பாணமாய், கட்சியாய், சாதியாய், சமயமாய், இன்னபிறவாய், சிதறிப்போகும் சிறிய தமிழ்மக்களால், அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத்தானும் அசைக்க முடியுமா?



நிலாந்தன்

# வடக்கு – கிழக்கு இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மேசைக்கு முஸ்லிம் பிரதிநிதிகளையும்

## அழைக்க வேண்டும் : ஜனாதிபதிக்கு கோரிக்கை

AL-MEEZAN FOUNDATION-SRILANKA

வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மேசைக்கு முஸ்லிம் பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிழக்கை தளமாக கொண்ட சிவில் அமைப்பான அல்- மீஸான் பௌண்டேஷன் சிறிலங்கா அமைப்பு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

அவர்கள் ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ள கோரிக்கையில் மிக நீண்டகாலமாக தொடரும் வடக்கு கிழக்கு இனப்பிரச்சினை தீர்வுக்காக ஜனாதிபதி எடுத்திருக்கும் முயற்சி இலங்கையர்கள் எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியது என்றும் அழகிய இலங்கை தீவை முன்னேற விடாமல் தடுக்கும் காரணங்களில் இனப்பிரச்சினை முக்கியத்துவம் பெறுகிறது. அதை தீர்த்து நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி எடுக்கும் முயற்சிக்கு நன்றிகளும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாதம் 11,12,13 ம் திகதிகளில் வடக்கு கிழக்கு மாகாண இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணும் நோக்கில் ஜனாதிபதியின் முயற்சியாக வடக்கு- கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற உள்ளதாகவும் அது காலத்தின் தேவையாகவும் அமைந்துள்ளதாகவும் அந்த பேச்சுவார்த்தைக்கு வடக்கு கிழக்கில் உள்ள மற்றும் ஒரு தேசிய இனமான முஸ்லிங்களையும் அழைத்து அவர்களின் கருத்துக்களையும், பிரச்சினைகளையும் கேட்பது நீதித்த, உறுதியான தீர்வுக்கு வழி சமைக்கும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் இலங்கையின் அதி சிரேஷ்ட அரசியல் தலைவரான ஜனாதிபதிக்கு வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லிங்களும் இனவாத, மதவாத, பிரதேசவாத செயற்பாடுகளினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை நன்றாக தெரிந்திருக்கும் என்றும் இவற்றை மையமாக கொண்டு நடைபெறும் பேச்சுவார்த்தையில் வடக்கு- கிழக்கில் உள்ள முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களையும் இம்மாதம் 11,12, 13ம் திகதிகளில் நடைபெற உள்ள வடக்கு கிழக்கு மாகாண இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன் அக்கடிதத்தின் பிரதிகளை பிரதமர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, தேசிய காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றோருக்கும் மேலதிக நடவடிக்கைக்காக பிரதியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் - மாளிகைக்காடு

# மாணவிக்கு வந்த மர்மமான தொலைபேசி அழைப்பு

## ஒரு வாரமாக இயங்காத பாடசாலை! - யாழில் சம்பம்?



யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், அண்மைக்காலமாக சர்ச்சையான விடயங்கள் இடம்பெற்றிருந்த நிலையில் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி மீள கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் புதிய அதிபர் நியமனமும் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவர் மாணவி ஒருவருடன் தகாத முறையில் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டதாக தெரிவித்து பொலிசில் முறைபாடு செய்யப்பட்டிருந்தது.

தொலைபேசியூடாக கணித பாடத்தை கற்பிக்கவுள்ளதாகக் கூறிவிட்டு மாணவியுடன் தகாத சொற்பிரயோகங்களை உபயோகித்து உரையாடிய சந்தர்ப்பத்தில் குறித்த உரையாடல் காணொலி பெற்றோரால் பதிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து பாடசாலைக்கு முன்பாக பெற்றோர் ஆசியர்களுடன் எதிர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதனை தொடர்ந்து ஆசியர்கள் கற்றல் செயற்பாடுகளை இடைநிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஆசிரியர்களாகிய தமக்கு பாதுகாப்பு இல்லை என கூறியெ கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

குறிப்பாக ஆசிரியர்கள் வலயக்கல்விப் பணிமனையிலும் முறைப்பாடு ஒன்றை முன்வைத்திருந்தனர்.

இதனை தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர், அதிகாரிகள், பொலிசார் மற்றும் பாடசாலை நிராகத்தினர் பாடசாலைக்கு நேரடி கள விஜயத்தை மேற்கொண்டு பெற்றோர்கள் மற்றும் கிராமத்தவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக வலையக்கல்விப்பணிப்பார் இவ்வாறு தெரிவிக்கின்றார்.

மாணவியின் பிரச்சினைக்குரிய தொலைபேசி அழைப்பின் பதிவானது பொலிரால் விசாரணைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பிரச்சினையின் பின்னர் பாடசாலையில் குழப்பம் விளைவித்து, பாடசாலைச் சொத்துக்களைச் சேதமாக்கிய குற்றச்சாட்டில் குறித்த மாணவியும் தாயாரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முகமாக பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் கடந்த 3ஆம் திகதி தம்முடன் கலந்துரையாடியிருந்ததுடன் மீள கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலையக்கல்விப்பணிப்பார் மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இதுவரை காலமும் அதிபர் இல்லாது இயங்கிய குறித்த பாடசாலைக்கு புதிய அதிபர் நியமனமும் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை குறித்த பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்ற முடியாது என்ற ரீதியில் முறைப்பாடளித்த அனைத்து ஆசிரியர்களும் இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளதாக வலையைக் கல்விப் பணிப்பார் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த ஆசிரியரை பழி வாங்கும் நோக்கில் திட்டமிட்டு இந்த அழைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான செயற்பாடுகளினால் மாணவி மற்றும் ஆசிரியர்களே மிகவும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தப்பட்ட இலக்கமும் குறித்த ஆசிரியரின் இலக்கம் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# அரசியல் சித்துவிளையாட்டுக்களுக்காகத்

## தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்காதீர்கள் - மகிந்த ராஜபக்ச



உரிய அனுமதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள தையிட்டிய திஸ்ஸ விகாரையை அகற்றக் கோருவது நியாயமான செயலன்று என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பில் ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எல்லா வியத்திற்கும் இனவாத, மதவாதக் கருத்துக்களை கக்குவதை தமிழ்க் கட்சிகள் உடன் நிறுத்த வேண்டும்.

அமைதி வழியில் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லும் தமிழ் மக்களை போராட்டம் என்ற போர்வையில் அவர்களை வன்முறைக்கு இட்டுச் செல்வதுதான் தமிழ்க் கட்சிகளின் இலக்காக இருக்கின்றது.

உங்கள் அரசியல் சித்துவிளையாட்டுக்களுக்காகத் தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்காதீர்கள் என்று தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரை உரிய அனுமதிகளைப் பெற்று அமைக்கப்பட்டது. அதனை அகற்றக் கோருவது எந்த வகையிலும் நியாயமானதில்லை என அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# திருக்கோவில் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு.

மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக அமையக் கூடாது என்ற நோக்கில் இணைந்த கரங்கள் அமைப்பினால் நாடு தழுவிய ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக அம்பாறை மாவட்ட திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் அதிகஷ்ட மற்றும் தொழில் வாய்ப்பற்ற குறைந்த வருமானத்தில் வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

கமு/திகோ/ஊறணி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கும், பொத்துவில் கமு/திகோ/இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன இன்று இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், எஸ்.காந்தன், சி.துலக்சன்,மா.ஜெயநாதன், தி.சதிஸ்குமார். ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இன் நிகழ்வில் கமு/திகோ/இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க. சந்திரகாசன், மற்றும் ஆசிரியர் க. கருணாகரன், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



உள்நாட்டு செய்திகள் - அம்பாறை

# யாழ்.தையிட்டி விகாரை தொடர்பில்

## மனோ கணேசனுக்கு எழுந்த சந்தேகம்..!

தையிட்டி விகாரை ஒரே நாளில் கட்டப்பட்டதா என்ற கேள்வி தனக்கு எழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது சமூக ஊடகத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

யாழ் தையிட்டியில் கட்டப்பட்டுள்ள விகாரையைப் பாரக்கும் போது அந்த விகாரையை இராணுவம் ஒரே நாளில் கட்டி முடித்து விட்டதா? அல்லது பல வருடங்களாக இந்தக் கட்டுமானப் பணிகளை இராணுவம் திரை போட்டு மூடி வைத்திருந்தா? என்ற சந்தேகம் தனக்கு எழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



## வடக்கு - கிழக்கில் தனியார்...

தெரிவித்துள்ளார். நேற்று கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“சில காலத்தின் முன்னர் வரை இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். தமிழ் பௌத்த சின்னங்களை ஆக்கிரமிப்பதற்காகத் தான் பௌத்த விகாரைகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. பௌத்தர்களே இல்லாத இடங்களில் அவை கட்டப்படுகின்றன.

விகாரைகளை கட்டி, அதை பராமரிக்க மெது மெதுவாக ஆட்களை கொண்டு வந்து, சிங்கள பிரதேசங்களாக்கும் நடவடிக்கைகள் நடந்து வருகிறது.

இந்த ஆட்சியில் பல விடயங்கள் நிறுத்தப்படலாமென பலர் நினைத்தனர். ஆனால் நிறுத்தப்படவில்லை. அதிபருக்கு பலமுறை முறையிடப்பட்டும், அது கவனிக்கப்படவில்லை.

இவற்றை நிறுத்த நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். பேச்சுவார்த்தை, சாத்வீக வழி, நாடாளுமன்றத்தின் ஊடாக முயற்சிக்க வேண்டும். அவற்றை செய்து கொண்டிருந்தாலும், அவற்றின் வேகம் போதாது என நினைக்கிறேன்.

நான் கந்தரோடையில் இருக்கிறேன். இந்தக் கிராமத்திலுள்ள பெரும்பாலான மக்களிற்கு இந்தப் பிரச்சினை சரியாக புரியவில்லை. எப்படி சிங்கள பௌத்த மத அடையாள மாற்ற முயற்சிகள் நடக்கிறது என்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

அது மாத்திரமல்ல, சற்று அதிக பணம் கிடைக்கிறது என்றால் காணிகளை விற்கிறார்கள். முக்கியமாக வெளிநாட்டில் உள்ளவர்கள். வெளிநாட்டில் உள்ள ஒருவர்தான் கந்தரோடையில் விகாரை கட்டப்படவுள்ள காணியையும் விற்றவர்.

வெளிநாட்டிலுள்ள பலர், இங்குள்ள காணிகளை பிற சமூகத்தவர்களுக்கு விற்பதால் ஏற்படும் அபாயத்தை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து விற்று வருகிறார்கள். சில இடங்களில் காணிகள் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம். நல்லூரிலும் விற்கப்படுகிறது.

இங்குள்ள இராணுவத்தினர் வெறும் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றின் உரிமையாளர்களை அடையாளம் கண்டு, அவற்றை வாங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, சிறியளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக மாற்று சமூகத்தினருக்கு விற்பதை நிறுத்துங்கள்.

இங்கு பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இப்போது நடக்கும் போராட்டங்கள் மிகச் சிறியவை. 3,5,10 பேருடன் நடக்கும் போராட்டங்களினால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது.

பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும். பௌத்த விகாரைகள் கட்டப்படுவது என்பது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் தமிழர்கள் வாழும் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டப்படுகின்றது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தமிழர்களின் பிரச்சினை இதற்கமைய பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரை ஒன்றை அமைத்து அந்த விகாரையை பேணி பாதுக்காக்கும் வகையில் பௌத்த பிக்குகளை கொண்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இதற்கமைய இந்த அரசாங்கத்திலாவது தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்ப்பார்ரக்கப்பட்ட போதிலும் அதற்கான எந்தவித நடவடிக்கையில் முன்னெடுக்கப்படவில்லை” - என்றார்.

## அதிகாரப் பகிர்வுடன் அரசியல்...

சிங்கள - பௌத்தமயமாக்கலுக்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும், நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியதாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் - தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் சட்டவிரோதமாக பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கை வடக்கு - கிழக்கில் நீண்டகாலமாகத் தொடர்கின்றது.

தமிழ் மக்களின் காணிகளில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது மட்டுமன்றி சில இடங்களில் சைவக் கோயில்களும் தாக்கப்பட்டு வருவதுடன் அழிக்கப்பட்டும் வருகின்றன.

கூடியளவுக்கு இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுத்து வந்திருக்கின்றோம் தொடர்ந்தும் எடுப்போம்.

இந்த நடவடிக்கைகள் முடிவுக்கு வரவேண்டுமெனில் ஒரு நியாயமான - நிரந்தரமான - தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழக் கூடிய அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

அதற்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கி வருகின்றோம். அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும். ஏனெனில் இந்த நாடு மீண்டெழ வேண்டுமெனில் அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஜனாதிபதியை நாம் சந்திக்கவுள்ளோம். அதன்போது இது தொடர்பில் பேசுவோம்.

கடந்த வெள்ளிக்கிழமை(05.05.2023) இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என்னை வந்து சந்தித்திருந்தார். அவரிடமும் இந்த விடயம் தொடர்பில் பேசினேன்.

அதேவேளை, ஏனைய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடனும் வடக்கு, கிழக்கில் தொடரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்பவை தொடர்பில் பேசி வருகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தையிட்டியில் அமைக்கப்பட்டு...

முதல் பேச்சு நடத்த ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், அந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டு குறித்த தொடர் பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்குமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முன்னதாக ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற தனது முடிவை பௌத்த தேரர்கள் போராட்டத்தினை அடுத்து ஜனாதிபதி மாற்றிக்கொண்டார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியை உடைய நபரின் அழைப்பினை ஏற்று எவ்வாறு தாம் பேச்சுவார்த்தையில் பங்கேற்பது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியை எழுப்பியுள்ளார்.

## சமஷ்டி அடிப்படையில் பேச்சு...

அவர் மேலும் தெரிவிக்கையில், தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அரசின் முழுமை யான அனுமதியுடன் இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டது.

இனவாத, மதவாதக் கண்ணோட்டத்துடன் இதனை நோக்குவதை தமிழ்க் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த விகாரை சட்டவிரோதமானது அல்ல. அமைக்கப்பட்ட இந்த விகாரை எந்தக் காரணத்துக்காகவும் அகற்றப்படாது என தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி ரணில் - தமிழரசு...

இந்நிலையில் ஜனாதிபதியுடன் இடம்பெறும் வடக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அழைக்கப்படாவிட்டால் குறித்த கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கும் என யாழில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பு மற்றும் 11,12,13 நடைபெறவுள்ள சந்திப்பு தொடர்பில் தமக்கு அறிவிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்பதாக கூறி வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் தனியாக சந்திப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஜனாதிபதி நாட்டில் இல்லாததால், அவருடைய செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இது தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவிக்கையில்,“வடக்கு மாகாண தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் 9ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்திப்பு தொடர்பில் நான் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்கவிடம் கலந்துரையாடினேன்.

இதன்போது சமன் ஏக்கநாயக்க, இது அபிவிருத்தி தொடர்பான சந்திப்பு, இதை ஒவ்வொரு மாகாணமாக கலந்துரையாடினால் இலகுவாக இருக்கும் என கூறினார்.

அப்போது சாள்ஸ்,இது அபிவிருத்தி தொடர்பான கூட்டமாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் 9ஆம் திகதி அரசியல் தீர்வு தொடர்பாக நடைபெறும் சந்திப்புக்கு எம்மை அழைக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் ஒரே கட்சி என கூறியுள்ளதாக தெரிவித்தார்.

பின்னர் சமன் ஏக்கநாயக்க, நீங்கள் கூறுவது சரி. எனக்கு 11,12,13, ஆம் திகதிகளில் நடைபெறும் சந்திப்பு தொடர்பில் தெரியப்படுத்தினார்கள். 9ஆம் திகதி நடைபெறும் சந்திப்பு பற்றி தெரியாது.

இருப்பினும் அன்றைய தினம் நடைபெறும் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என கூறியதாக சாள்ல் தெரிவித்தார்.

மேலும் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் என்றால் அதில் ஏனைய கட்சிகளும் உள்ளடங்க வேண்டும். அதாவது டக்ளஸ் போன்றவர்களின் கட்சிகளும் அந்த சந்திப்பில் கலந்துகொள்ள வேண்டும். ஒருவேளை 9ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பை கூட்டமைப்பிலுள்ள வேறு யாரும் ஜனாதிபதியிடம் கோரியிருக்கலாம்.

இதேவேளை கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த சந்திப்பிற்கு அழைக்கப்படாவிட்டால் நாம் அந்த சந்திப்பில் கலந்துக் கொள்ள மாட்டோம் என செல்வம் அடைக்கலநாதன், ஜனா எம்.பியிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயத்தை பெரிதாக்குவதற்கு அப்பால், வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை தனி தனியாக சந்திக்கும் நடைமுறையை உருவாக்க விரும்பவில்லை என சாள்ஸ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு-கிழக்கு சார்ந்த அரசின் அநீதிகளுக்கும் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் அடக்குமுறைகளுக்கும் நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக கருத்து தெரிவிக்கும் ஒருவராக சாள்ஸ் இருப்பதுடன் கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் அதிகளவு கருத்துக்களை தெரிவிக்கும் வட மாகாண நாடாளுமன்ற உறுப்பினரகளுள் ஒருவராக காணப்படுகின்றார்.

இதனடிப்படையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொண்ட ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி நாட்டிற்கு திரும்பியதும் வடக்கு-கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துக்கொள்ளும் வகையில் சந்திபொன்றை ஏற்பாடு செய்து, திகதி தொடர்பான அறிவிப்பை வழங்குவதாக உத்தரவாதமளித்துள்ளார்.

## கந்தரோடை விகாரைக்கு...

கந்தரோடையில்பௌத்த விகாரை கட்டுவதற்கு எதிராக நேற்று போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கந்தரோடையில் உள்ள தமிழ் பௌத்த எச்சங்களின் வரலாற்றை மாற்றியமைத்து, சிங்கள பௌத்த தலமாக்கும் முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், இந்த போராட்டம் நடந்தது.

அங்குள்ள தனியார் காணியொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால கொள்வனவு செய்து, விகாரை கட்ட வழங்கியுள்ளார். அங்கு விகாரை கட்டும் பணிகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கந்தரோடையின் வரலாற்றை சிங்கள பௌத்த பேரினவாத வரலாறாக மாற்றியமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம்.

தேசியம்
THESIYAM

# அழைப்பில்லை என்பது பொய்..!

## என்ன விளக்கம் என்றே தெரியாதவர்கள் தான் அறிக்கை விடுகின்றார்கள்! சாணக்கியன்



ஜனாதிபதி, கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கவில்லை என்பது பொய்யான கருத்தாகும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதி ஒரு சந்திப்பிற்கான நேரத்தை ஒதுக்கியுள்ளார்.

இந்தக் கூட்டத்திலே நாங்கள் எதைப்பற்றிப் பேசப்போகின்றோம் என ஆராய்வதற்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி சம்பந்தன் இல்லத்திலே சந்திக்கவிருக்கின்றோம்.

இதைப்பற்றி கருத்து தெரிவித்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பு பற்றி தெரியாது. என்ன விளக்கம் என்றே தெரியாதவர்கள் தான் அறிக்கை விடுகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத்தான் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் இருப்போருக்கு அழைப்பில்லையென்பது பொய். அந்த சந்திப்பில் நானும் கலந்துகொள்ளவிருக்கின்றேன்.

கிழக்கு மாகாணத்திலிருக்கின்ற பல பிரச்சினைகளைப் பற்றி நான் ஜனாதிபதியை தனிப்பட்ட முறையில் சந்தித்த போதும் கூறியிருக்கின்றேன். விஷேடமாக வனஇலாகா சம்பந்தப்பட்ட விடயங்கள்.

கடந்த 1985ஆம் ஆண்டில் இருந்தவாறு வன இலாகாவிற்குரிய காணிகளை வழங்கப்படும் என்று கூறியிருந்தாலும் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தொல்பொருள் பிரச்சினைகளைப் பற்றி கூறியபோது குறிப்பாக திருகோணமலை குச்சவெளி பிரதேசத்திலே 30றகும் அதிகமான புதிய பௌத்த வணக்கஸ்தலங்கள் உருவாக்கப்பட்டிருப்பதைப்பற்றி ஜனாதிபதியிடம் கூறிய போது அவர் அதை நடத்தும் விகாராதிபதியை தான் கண்டிப்பதாக சொல்லியிருந்தார்.

ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக இல்லை. வடக்கு மற்றும் கிழக்கிலே இருக்கின்ற இவ்வாறான பல பிரச்சினைகள் பற்றி ஆராயவிருக்கின்றோம். ஜனாதிபதியின் சந்திப்பில் கலந்துரையாடவுள்ளோம்.

இந்த சந்திப்பிற்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கவில்லை என்பது தவறான கருத்தாகும்.

ஜனாதிபதியயின் சந்திப்பு பற்றி கருத்து தெரிவிப்போருக்கு உண்மையில் இந்தச் சந்திப்பு பற்றி எதுவும் தெரியாது போலவே தெரிகின்றது எனவும் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உள்நாட்டு செய்திகள் - மட்டக்களப்பு

# தமிழர் பகுதியில் பெரும் சோக சம்பவம்:

## இரு மாணவர்கள் பரிதாபமாக உயிரிழப்பு



மட்டக்களப்பு மாவட்டம் - சவுக்கடி பகுதியில் கடலில் நீராடச் சென்ற இரு மாணவர்கள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ள அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றுவிக்க இருந்த மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலிருந்து பிரத்தியேக வகுப்பு ஒன்றிற்கு சென்ற மாணவர்கள் இரண்டு பேரே நேற்றைய தினம் (07-05-2023) காலை மட்டக்களப்பு சவுக்கடி கடற்கரை பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் கறுப்பங்கேணியை சேர்ந்த 16 வயதான டானியல் றோகித் மற்றும் இருதயபுரத்தினை சேர்ந்த 16 வயதான நிரோசன் பிரவீன் ஆகியோர் என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவர்கள் நேற்று முன்தினம் (06-05-2023) மாலை வீட்டிலிருந்து வந்து குறித்த கடற்பகுதியில் குளித்துக் கொண்டிருக்கும்போது அலையில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணையை தொடர்ந்த சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்களின் உயிரிழப்பு மட்டக்களப்பில் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட

## பல மாகாண ஆளுநர்களை பதவி விலகுமாறு கூறியமைக்கான காரணம் வெளியானது



மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து நான்கு மாகாண ஆளுநர்களை பதவி விலகுமாறு ஜனாதிபதி அலுவலகம் பணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் ஊடகம் ஒன்று இந்த செய்தியை முக்கியத்துவப்படுத்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் சப்ரகமுவ ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகியோர் இதில் உள்ளடங்குகின்றனர். குறித்த ஆளுநர்கள், மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படாமை காரணமாகவே விலக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, லண்டனில் நேற்று முன்தினம் (06.05.2023) இடம்பெற்ற பிரித்தானியாவின் புதிய மன்னர் மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பியவுடன் புதிய ஆளுநர்கள் விரைவில் பெயரிடப்படவுள்ளனர்.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானின் பெயரும் பரிந்துரையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு அம்பாறை தமிழ் அறிவர்கள் சங்கத்தின் 3ஆவது இந்திரவிழாவும் ஆண்டு விழாவும்!!



மட்டு அம்பாறை தமிழ் அறிவர்கள் சங்கத்தின் 3ஆவது விழாவும் இந்திரவிழாவும் நேற்று முன்தினம் 2023/05/06 திருக்கோவில் 04 பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழ் அறிவர்கள் தலைமையகத்தில் மிக சிறப்பாக இடம் பெற்றுது....

இன் நிகழ்வானது திரு.கு.குமாரதாசன் தாபகர் பிரதான ஆசான் தமிழ் அறிவர்கள் சங்கம் அவர்களின் தலைமையிலும் சிவஸ்ரீ இரா. ஜெகதீஸ்வர சர்மா அவர்களின் மூன்னிலையிலும் இடம் பெற்று...

இன் நிகழ்வில் மங்கள விளகேற்றல் தேவாரம் இசைத்தல் இந்து சமய கொடி ஏற்றுதல் மற்றும் ஜோகா தண்டாவீச்சு தற்காப்பு கலை பயிற்சி நெறிகளும் இடம் பெற்றதுடன் சிவஸ்ரீ இரா.ஜெகதீஸ்வர சர்மா அவர்களின் ஆசியுரையும் இடம்பெற்றது...

மேலும் யோகா கலை பயிற்சி பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கௌரவிப்பு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றுது... மற்றும் கலை நூட்பகலைஞர்களின் நேர்காணல் நிகழ்வும் சேவையாளர்கள் தொழிநூட்பவியலாளர்கள் கௌரவிப்பும் இடம் பெற்று குறிப்பிடத்தக்கது.....

இன் நிகழ்வில் பிரதம மற்றும விசேட சிறப்பு அதிதிகளாக திரு.கு.ஜெயராஜ் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோத்தர் மாவட்ட செயலகம் அம்பாறை மற்றும் திரு.கண. இராஜரெத்தினம் திருநாவுகரசு நாயனார் குருகுல ஆதினம், திரு.வ.மதனசீலன் கலாச்சார அபிவிருத்தி உத்தியோத்தர் திருக்கோவில் பிரதேச செயலகம் , திரு.வி.விமலேஸ்வரன் அதிபர் சத்திவித்தியாலயம் விநாயகபுரம், திருமதி.முகுந்தினி சுரேந்திரன் நடன ஆசிரியர் சக்திவித்தியாலயம் விநாயகபுரம்.. ஆகியோர் இவ் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்...

ஜே.கே.யதுர்ஷன் - தம்பிலுவில்
கிழக்கு மாகாண செய்திகள்

# எங்களுடைய சொந்த நிலத்தில்...

நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிறிதரன் பிரதம அதிதி யாக கலந்து கொண்டதுடன், லண்டன் வோள் தம்ஸ்ரோம் கற்பகவினாயகர் ஆலய அறங்காவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித்த நிகழ்வில் உரை யாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் குறிப் பிடுகையில்,

கால்நடைகள் மற்றும் தோட்டங்கள் செய்யக் கூடியதாகவும், அப்பளம் உள்ளிட்ட சிறு கைத்தொழில் செய்யக்கூடிய இடமாகவும் மாற்றி அமைத்து மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு மாதிரி பண்ணை. இது எல்லோருக்கும் உரித்தான சொத்தாக இதனை பாதுகாக்க வேண்டும். இதனை பாதுகாக்கத் தவறி இந்த சொத்து எமது கைகளை விட்டு போனால் இதனை வெற்றிகரமாக நடார்த்த முடியாது.

இன்று நாங்கள் வாங்கும் பொருட்களின் விலை மற்றும் உற்பத்தி செலவு, அதனை சந்தைப்படுத்தல் மற்றும் அதனால் வரக் கூடிய லாபம் மிகக் குறுகியதாக இருக்கின்றது. ஏனெனில் இந்த நாட்டினுடைய பொருளாதார நிலைமையும் அவ்வாறானது.

இந்த நிலையில் உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெறக்கூடிய வகையில் எங்களுடைய செயல் திட்டங்களை நாங்கள் முன்னெடுக்க வேண்டும். இலங்கையில் இருக்கின்றது

அல்லது அரசாங்கத்திடம் நல்ல திட்டமிருக்கின்றது. அதனை செயற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை இப்பொழுது இல்லை. நாங்கள் அதை கைவிட வேண்டும்.

எங்களுடைய சொந்த நிலத்தில் சொந்த காலிலே நாங்கள் எவ்வாறு உழைத்து முன்னேறுவது என்றும், அதற்கு கோபால் அண்ணன் போன்றோரை கருவியாக பயன்படுத்தி முன்னுறுவது என்றும், கிடைக்கின்ற சின்ன உதவிகளை எவ்வாறு மேம்படுத்துவது என்ற திட்டங்கள் உங்கள் மனங்களில் வரவேண்டும். அது தான் என தெரிவித்தார்.